# 2016 நவம்பர் 30ஆந் திகதியின் சபை அலுவல்கள்

**திகதி :** 2016-11-30

கௌரவ திலங்க சுமதிபால, பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளருமானவர் தலைமை வகித்தார்கள்.

**சபாநாயகரின் அறிவித்தல்கள்**

பின்வரும் அறிவித்தல் விடுக்கப்பட்டது-

'A' : பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவின் கூட்டம்

**மனுக்களைச் சமர்ப்பித்தல்**

பின்வரும் பாராளுமன்ற உறுப்பினரினால் பொதுமனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டன:-

(i) கௌரவ லக்கி ஜயவர்தன - இரண்டு மனுக்கள்
(ii) கௌரவ நிஹால் கலப்பத்தி - இரண்டு மனுக்கள்
(iii) கௌரவ புத்திக பத்திறண - ஆறு மனுக்கள்

(மனுக்கள் பொதுமனுக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்படும்)

**தனியார் உறுப்பினர்கள் சட்டமூலங்கள்**

கௌரவ (பேராசிரியர்) ஆசு மாரசிங்க அவர்களுக்கு **"இலங்கை நிர்மாணக் கைத்தொழில் சம்மேளன (கூட்டிணைத்தல்)"** சட்டமூலத்தை சமர்ப்பிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

நிலையியற் கட்டளை 47(5) இன் கீழ் பாராளுமன்றத்திற்கு அறிக்கை செய்வதற்கு மேற்சொன்ன சட்டமூலம் வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சருக்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.

**இன்றைய தினத்திற்கான சபையின் பிரதான அலுவல்கள்**

**ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2017) - குழு**

ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் (2017) ஒதுக்கப்பட்ட பதினாறாம் நாள் இன்றாகும். - " குழு நிலை விவாதம்"

**ஒத்திவைப்பு வேளையின் போதான பிரேரணை**

"கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள இரணதீவு கரையோரப் பகுதியில் மீனவர்களது மீன்பிடித்தல் நடவடிக்கைகள்" தொடர்பான ஒத்திவைப்பு வேளையின் போதான பிரேரணை கௌரவ நிஹால் கலப்பத்தி அவர்களால் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது.

அதனையடுத்து, 1855 மணியளவில் பாராளுமன்றமானது 2016 டிசம்பர் 01ஆந் திகதி வியாழக்கிழமை 0930 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

[வரவு செலவுத் திட்டம் 2017]

** இது ஒரு திருத்தப்படாத பதிப்பாகும். இத்தினத்தின் அலுவல்களின் அதிகார அறிக்கைக்காக தயவுசெய்து ஹன்சாட் அறிக்கையைப் பார்க்கவும்.*